**இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம் - 2019**

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் (''பல்கலைக்கழகம்'') 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்ட ஏற்பாடுகள் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பல்கலைக்கழகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 468,015,255 கிரயமான 20 உருப்படிகளிற்குரிய பல்கலைக்கழகத்தின் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்படுதல். |

| | | | |
|---|---|---|---|
| | ஆதனம், பொறி மற்றும் உபகரணம் தொடர்பான வெளிப்படுத்தல் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் (எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்) - 7 இன் 42(ஆ) பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதே போல் நிதிக்கூற்றுக்களில் அச் சொத்துக்களின் முகப் பெறுமதியை காட்டுவது தொடர்பாக எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் - 3 இன் தேவைப்பாட்டின் பிரகாரம் அச் சொத்தக்களின் பயன்தரு ஆயுட்காலத்தின் மதிப்பிடப்பட்ட தவறு சீர்செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் இன் 72 ஆம் பிரிவின் பிரகாரம் காணி மற்றும் கட்டிடம் ஒன்றாக கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் அவை தனித்தனியாக கணக்கீடு செய்யப்படுகின்றன. எனினும் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான பல்கலைக்கழகத்தின் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக காட்டப்படாமல் இவை ரூபா 1,707 மில்லியனாக ஒன்றாக காட்டப்பட்டிருந்தன. | ஈயூஎஸ்எல் இற்கு சொந்தமான காணியின் உரிமைத்துவத்தை பெற்றுக் கொள்ளுதல் மற்றும் கட்டிடங்களின் மீள்மதிப்பீட்டுச் செயன்முறை என்பன தற்போது செயன்முறையில் காணப்படுகின்றன. இச் செயன்முறை பூர்த்தியடைந்ததும் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இல. 07 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக வெளிப்படுத்தப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் பின்பற்றப்படுதல். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான பல்கலைக்கழகத்தின் ஆதனம், பொறி மற்றும் உபகரண பகுதிக்கான பெறுமானத்தேய்வுச் செலவினம் ரூபா 14,704,390 தொகையாக காணப்பட்ட போதிலும் அச் சொத்துக்களிற்காக நிதிச் செயலாற்றல் கூற்றிற்கு அறவிடப்பட்ட பெறுமானத்தேய்வு செலவினம் ரூபா 64,735,341 ஆகும். இதன் விளைவாக மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 50,030,095 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | தளபாடம் மற்றும் பொருத்துக்களிற்கான பெறுமானத்தேய்வு தொகை குறைவாக அறவிடப்பட்டமையை திருத்தம் செய்ததன் காரணமாக இது ஏற்பட்டிருந்தது. 649 ஆம் இலக்க யூஜீசீ சுற்றறிக்கையின் பிரகாரம் இச் சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் 10 ஆண்டுகளாகும். அதாவது பெறுமானத்தேய்வு விகிதம் ஆண்டொன்றிற்கு 10% ஆகும். 10 ஆண்டுகளிற்கு மேற்பட்ட பொருட்கள் குறைவாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்ததனால் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்த காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றின் ரூபா 526,283,741 தொகையான மொத்த மீதியில் ரூபா 3,048,236 தொகையான காசு மற்றும் காசுக்குச் சமமானவை தொடர்பான சான்று கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | இவை தகுதிவாய்ந்த அதிகாரியால் (சபைக்குப் பதிலாக) 11 வங்கிக் கணக்குகள் மூடப்பட்டதன் காரணமாக 2011 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்பட்ட மீதிகளாகும். பல இடங்களில் பல்வேறு நடவடிக்கைகளிற்கதாக செயற்படுத்தப்பட்ட பதினொரு வங்கிக் கணக்குகள் காணப்பட்டதுடன் அதிக கட்டுப்பாடு மற்றும் வெளிப்படைத் தன்மையை கொண்டிருப்பதற்காக அனைத்துக் கணக்குகளும் ஒரு கணக்கிற்கு மாற்றப்பட வேண்டுமென்று தகுதிவாய்ந்த அதிகாரி கோரியிருந்தார். காசுப் புத்தகங்களை நாளதுவரையாக்குவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த போதிலும் ஆவணங்கள் கண்டுபிடிக்கப்பட முடியாதிருந்ததன் காரணமாக காசுப்புத்தகத்தை நாளதுவரையாக்குவது சாத்தியமற்றிருந்தது. நீடித்த கணக்கீட்டு குறைபாடுகள் தொடர்பான விடயத்தை ஆராய்வதற்கு பதிவாளரால் நியமனம் செய்யப்பட்ட குழுவுடன் இக் குறைபாடுகளை ஆராய்ந்து சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றில் அதிகரித்துக் காட்டப்பட்ட பெறுமதியை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | ரூபா 504,574,803 தொகையான நட்டஈடு கோரி பல்கலைக்கழகத்திற்கு எதிராக பல்வேறு தரப்பினர்களால் பதின்மூன்று சட்ட வழக்குகள் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டிருந்த போதிலும் அவை தொடர்பாக நிகழத்தக்க பொறுப்புக்கள் தொடர்பான விபரங்கள் எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் - 8 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | மேற்படி நியமத்தின் பிரகாரம் இது எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களில் விளக்க விபரிப்பொன்றாக வெளிப்படுத்தப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் பின்பற்றப்படுதல். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 757(2) | மீளாய்வாண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2020 யூன் 30 வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பெரும்பாலான வேலைகள் உரிய நேரத்தில் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் கொவிட் பெருந்தொற்று காரணமாக இறுதியாக்கல் தாமதமடைந்திருந்ததுடன் இது தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பொருள் மெய்மையாய்வு அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) யூஜீசீ இன் தாபன விதிக்கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் 3(1) ஆம் பிரிவு மற்றும் 2017 யூலை 10 ஆம் திகதிய 10/2017 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை கடிதம் | மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் கல்விசார் பதவியணியினரிற்கு அவர்களது வருகை மற்றும் வெளிச்செல்லல்களை உறுதிப்படுத்தாமல் ரூபா 748 மில்லியன் தொகையான சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்தன. | மரபொன்றாக ஏனைய பல்கலைக்கழகம் அனைத்திலும் உள்ளவாறு கல்விசார் பதவியணியினர் அவர்களது வரவை பதிவுசெய்வதில்லை. எனினும் பெரும்பாலான அனைத்து துறைகளும் அவர்களது உரிய துறைகளில் உள்ள வருகைப் பதிவேட்டில் வருகைதந்தமைக்காக கையொப்பமிட்டிருந்தனர். | தாபன விதிக்கோவை மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் வருகை மற்றும் வெளிச்செல்லல்களை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2015 நவம்பர் 17 ஆம் திகதிய 15/2015 ஆம் இலக்க தாபனச் சுற்றறிக்கை கடிதம் | உள்ளக மாணவாகளிற்காக நடாத்தப்பட்ட பரீட்சைகளின் பெறுபேறுகள் 03 மாதங்களினுள் வெளியிடப்பட வேண்டிய போதிலும் 2014/2015 தொடக்கம் 2017/2018 வரையான கல்வியாண்டுகளிற்காக நடாத்தப்பட்ட பரீட்சைகளிற்கான பெறுபேறுகள் 01 தொடக்கம் 10 மாதங்கள் வரையிலான தாமதத்தின் பின்னர் வெளியிடப்பட்டிருந்தன. இந் நடைமுறை மாணவர்களின் தொழில்வாய்ப்புக்களை பாதித்திருந்தது. | நிகழ்ச்சித்திட்ட மீளாய்வு கைநூல் மற்றும் தர உறுதிப்பாடு என்பன இரண்டாவது மதிப்பெண் இடும் பணியை செய்வதற்கு வெளியக பரீட்சகர்களை ஊக்குவிக்குகின்றன. இத் தேவைப்பாட்டை பின்பற்ற முயற்சித்தமை பிரதானமாக தாமதத்திற்கு பங்களித்திருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | ரூபா 4,309,751,059 தொகையான நிலையான சொத்துக்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | தற்போது ஈயூஎஸ்எல் நிலையான சொத்துப் பதிவேட்டு மென்பொருளை கொண்டிருக்கின்றதுடன் முறைமையை filtering செய்வதன் மூலம் தேவையான தகவல்கள் பெறப்படும். | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் விரிவாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு | வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து வரைபு ஆண்டறிக்கையின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து வரைபு ஆண்டறிக்கையை சமர்ப்பிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 345,563,842 பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 334,815,279 ஆக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா 10,748,563 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. ஆளணி வேதனங்கள் அதிகரித்தமை இவ் வீழ்ச்சிக்கான காரணமாக பிரதானமாக பங்களித்திருந்தது.

### 2.2 பிரதான வருமான செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

மீளாய்வாண்டிற்கான மீண்டெழும் மானியம் மற்றும் ஏனைய வருமானம் போன்ற பல்கலைக்கழகத்தின் வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 20 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. யூஜீசீ சுற்றறிக்கையின் பிரகாரம் கல்விசார் படிகளை உள்ளடக்குவதை அடிப்படையாகக் கொண்டு பணிக்கொடை எற்பாடு கணிப்பீடு செய்யப்பட்டதன் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது பல்கலைக்கழகத்தின் செலவினமான அத்தகைய பணிக்கொடை 514 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் பெறுமானத்தேய்வு மற்றும் காலக்கழிவு 69 சதவீதத்தால் அதிகரித்திருந்தது என்பன மேற்படி தொடர்ச்சியான வீழ்ச்சிக்கு பிரதானமாக பங்களித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விரிவுரையாளர்களிற்கான கல்விசார் படிக் கொடுப்பனவின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை கருத்தில் கொள்ளாமல் 1988 யூலை 13 ஆம் திகதிய 21/88 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டு பயங்கரவாத வன்முறை காரணமாக 2004 இல் இறந்த விரிவுரையாளரின் தங்கியிருப்போரிற்கு 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 யூலை மாதம் வரை ரூபா 8,640,688 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | பின்னர் திருத்தப்பட்டவாறு 1988.07.13 ஆம் திகதிய 21/88 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் இறந்த ஊழியரின் தங்கியிருப்போரிற்கு அவரது ஓய்வுபெறும் வயதை அடையும் காலம் வரை அவரால் பெறப்படக்கூடிய சம்பளம் மற்றும் ஏனைய படிகள் செலுத்தப்பட வேண்டும். மேற்படி ஏற்பாடுகளின் பிரகாரம் 2004 இல் இறந்த ஊழியரின் தங்கியிருப்போரிற்கு சம்பளம் மற்றும் படிகளை நாங்கள் செலுத்தியிருந்தோம். | கல்விசார் படிகளை வழங்குவதன் குறிப்பிட்ட நோக்கங்களிற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 204 கல்விசார் பதவியணியினரில் 24 கல்விசார் பதவியணியினர் மாத்திரமே ஒத்துழைப்பு ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். ஆராய்ச்சி குழுவால் 11 ஆராய்ச்சிகள் அங்கீகரிக்கப்பட்டு மானியங்கள் செலுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் இரண்டு ஆராய்ச்சி செயற்திட்டங்கள் மாத்திரம் பட்டியலிடப்பட்ட காலப்பகுதியின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 11,244,372 மொத்த ஒதுக்கப்பட்ட மானியத்தில் 58 சதவீத மானியம் அல்லது ரூபா 6,851,466 தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டுக் குழுவில் (ஆர்பிசீ) ஆராய்ச்சி மானியங்களின் செயன்முன்னேற்றம் கண்காணிக்கப்பட்டு ஆராய்ச்சியின் மெய்க்கருத்து தொடர்பான நியாயமான காரணங்களை கருத்தில் கொண்டு மானியக் காலப்பகுதி நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது. ஏற்கனவேயுள்ள மானியத்தை வழங்கும் வரையறைகள், செயன்முன்னேற்ற கண்காணிப்பு மற்றும் இறுதி வெளியீட்டு மதிப்பீடு என்பவற்றிலுள்ள பலவீனங்களை சீர்செய்வதற்கு சபைக்கு (Senate) புதிய ஆராய்ச்சி கொள்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 நிதிகளை குறைவாக பயன்படுத்துதல்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நூலகத்தின் தன்னியக்க நோக்கத்திற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து பெறப்பட்ட ரூபா 4,500,000 தொகை 5 ஆண்டுகளிற்கு மேலாக உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு நியம அங்கீகார அளவுகோல்களின் பிரகாரம் இது மானியமொன்றாக இனங்காணப்பட்டு பிற்போடப்பட்ட வருமானமொன்றாக காட்டப்பட்டிருந்தது. அவை பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் மானியத்தின் காலக்கழிவிற்கான கணக்கீட்டு நடைமுறை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆகையால் கணக்குப் புத்தகங்களில் மீதியாகவுள்ளது. மானியத்திலிருந்து செலவினம் தனியாக இனங்காணப்பட்டதும் அனைத்து மானியங்களும் சோக்கப்பட்டு மானியத்தை காலக்கழிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மேலதிக தாமதமின்றி குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்கு மானியத்தை காலக்கழிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒரு Hatchery இயந்திரம், இரு சக்கர உழவு இயந்திரமாக இருந்த ஒரு அச்சிடும் இயந்திரம் மற்றும் விவசாய பீடத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 20 மில்லியன் பெறுமதியான நடமாடும் ஆய்வுகூட வாகனமொன்று என்பன குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்கு முறையாக பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் அவை விளைவற்றிருந்தன. | வெள்ளம் காரணமாக Hatchery பிரிவு சேதமடைந்திருந்தது. உபகரணத்தை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அச்சிடும் இயந்திரம் பழுது காரணமாக பயன்படுத்தப்பட முடியாதிருந்தது. நடமாடும் ஆய்வுகூடம் AHEAD செயற்திட்ட மானியத்தின் கீழ் விஞ்ஞான பீடத்தால் புதுப்பிக்கப்பட வேண்டியதுடன் ஆராய்ச்சி மற்றும் சமூக நலனிற்காக பயன்படுத்தப்பட வேண்டியுள்ளன. இரண்டு சில்லு உழவு இயந்திரம் பொறியியல் வேலைத்தள பிரிவில் கற்பிக்கும் நோக்கத்திற்காக தற்போதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. | மேலதிக தாமதமின்றி பிரச்சனைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு கல்விசார் பதவியணிக்காக 284 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் காணப்பட்டதுடன் கல்விசார் பதவியணியினரின் உள்ளபடியான எண்ணிக்கை 217 ஆக காணப்பட்டதால் வெற்றிடங்களின் | பல சந்தர்ப்பங்களில் கல்விசார் பதவிகளை காலரீதியாக விளம்பரப்படுத்துவதற்கு பல்கலைக்கழகம் நடவடிக்கைகளை எடுத்திருந்தது. 2006.06.06 ஆம் திகதிய 876 ஆம் | தாமதமின்றி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

எண்ணிக்கை 67 ஆக உள்ளதுடன் அதில் 14 சிரேஷ்ட பேராசிரியர்களிற்கு சொந்தமான வெற்றிடங்களாகும். கல்விசாரா பதவியணியினரில் உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை 93 ஆகும். இந் நிலைமை மாணவர்களின் கல்விசார் நடவடிக்கைகளை பாதித்திருந்த போதிலும் 2020 யூலை 27 வரையிலும் பல்கலைக்கழகம் வெற்றிடங்களை நிரப்பியிருக்கவில்லை.

இலக்க யூஜீசீ சுற்றறிக்கையின் பிரகாரம் கீழ்நிலை பணியாளர் தரங்கள் மற்றும் 14 பதவிகளிற்கான அனைத்து வெளிப்புற ஆட்சேர்ப்புக்களும் கல்வி அமைச்சினால் இணங்கப்பட்ட விண்ணபதாரர் பட்டியலொன்றிலிருந்து மேற்கொள்ளப்படுகின்றன. உயர் கல்வி அமைச்சால் இணங்கப்பட்ட விண்ணபதாரர் பட்டியல் உயர் கல்வி அமைச்சராக அக் காலத்தில் நியமனம் செய்யப்பட்ட அமைச்சரால் நிறுத்தி வைக்கப்பட்டு அரசாங்கத்தால் 2019 ஆம் ஆண்டில் அடிக்கடி மாற்றப்பட்டிருந்தது.